தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்ற மேலவையின் ஐம்பத்திமூன்றுவது கூட்டத் தொடர்.

புதன்கிழமை, 1978 மார்ச் 15.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் **மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. இரங்கல் தீர்மானம்.

ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் பொப்பிலி ராஜா திரு. ஆர். ஆர். எஸ். ஆர். ரங்கா ராவ் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களே, இரங்கல் தீர்மானம் ஒன்றை அவையின் முன் மொழிகிறேன் :—

"ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சராக இருந்த பொப்பிலி ராஜா திரு. ஆர். ஆர். எஸ். ஆர். ரங்கா ராவ் அவர்கள் 10—3—1978 ஆம் நாளன்று விசாகப்பட்டினத்தில் இயற்கை எய்தியதைக் குறித்து இவ்வவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறது."

திரு. பொப்பிலி ராஜா அவர்கள் 1932 ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து 1936 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரையிலும், மீண்டும் 1936 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து 1937 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரையிலும் ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தார்.

அவர் நீதிக் கட்சியின் முக்கிய தலைவராக இருந்தவர். அவர் அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராக இருந்தார்.

மறைந்த பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நின்றனர்.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.